இயல் ஒன்று

*மொழி*

# அமுதஊற்று



தமிழ் எழுத்துகளில் ஊர்ப் பெயர்கள் பொறிக்கப்பட்ட பண்டைய காசுகள்.

## கற்றல் நோக்கங்கள்

- தமிழ்மொழியின் செழுமை குறித்து ஆற்றலுடன் உரையாற்றுதல்.
- மொழியிலுள்ள வகைப்படுத்தப்பட்ட சொல்வளங்களைச் சொற்களின் வாயிலாகப் பேச்சிலும் எழுத்திலும் இடமறிந்து கையாளுதல்.
- உரைநடையிலுள்ள அணிநலன்களை உள்வாங்கிக்கொண்டு நயமிகு தொடர்களை உருவாக்கி வெளிப்படுத்துதல்.
- மொழி தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரும் நுட்பத்தை அறிந்து பயன்படுத்துதல்.
- சொல்லாக்க விதிமுறைகளை அறிந்து புதிய சொற்களை உருவாக்குதல்.

மொழி

க

கவிதைப் பேழை


# அன்னை மொழியே

*– பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

G9082

நுழையும்முன்

சின்னக் குழந்தையின் சிரிப்பும் ஆனவள்; பழுத்த நரையின் பட்டறிவும் ஆனவள்; வானத்திற்கும் வையத்திற்கும் இடைப்பட்ட யாவற்றையும் கவிதையாகக் கொண்டவள்; உணர்ந்து கற்றால் கல்போன்ற மனத்தையும் கற்கண்டாக்குபவள்; அறிவைப் பெருக்குபவள்; அன்பை வயப்படுத்துபவள்; செப்புதற்கரிய அவள் பெருமையைப் போற்றுவோம் .



### அழகார்ந்த செந்தமிழே!

**அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!*
*முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!*
*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!*

*தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!*
*இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!*
*மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! **

### செப்பரிய நின்பெருமை

*செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை*
*எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?*
*முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்*
*விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்*

*உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்*
*செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த*
*அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி*
*முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!*

**– கனிச்சாறு**

### பாடலின் பொருள்

அன்னை மொழியே! அழகு நிறைந்த செழுந்தமிழே! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்.

செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமைதனை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறுதான் விரித்துரைக்கும்? பழம்பெருமையும் தனக்கெனத் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! வியக்கத்தக்க உன்னுடைய நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரையும் எமக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன. எம் தனித்தமிழே! வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று நாங்கள் உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம்.

*சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன்*
*சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்*

**க. சச்சிதானந்தன்**

### நூல் வெளி

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி 1) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்பில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பியவர் துரை. மாணிக்கம் என்ற இயற்பெயர் கொண்ட பெருஞ்சித்திரனார்.

இவர் உலகியல் நூறு, பாவியக்கொத்து, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவரின் திருக்குறள் மெய்ப்பொருளுரை, தமிழுக்குக் கருவூலமாய் அமைந்துள்ளது. இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்...

1. "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
   ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
   கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று
   இத்திறத்த எட்டுத் தொகை"

   இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.
2. "எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்" என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.



10th_Tamil_Unit 1.indd 3 12/08/2021 7:33:44 PM


உரைநடை உலகம்

மொழி

க

# தமிழ்ச்சொல் வளம்

*– தேவநேயப் பாவாணர்*




'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்கிறார் மகாகவி பாரதியார். காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு இலங்குகிறது நம் செந்தமிழ் மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடை பகர்கிறது, தமிழ்ச்சொல் வளம்.



சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.

"தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழிலுள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் அவற்றில் இல்லாக்குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத்தெளிவாகத் தோன்றும். தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமன்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில்உள" என்கிறார் கால்டுவெல் (திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்).

தமிழ்ச்சொல் வளத்தைப் பலதுறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பெறும்.

### அடி வகை

ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்.

தாள் : நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
தண்டு : கீரை,வாழை முதலியவற்றின் அடி
கோல் : நெட்டி,மிளகாய்ச்செடி முதலியவற்றின் அடி
தூறு : குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி



*தட்டு அல்லது தட்டை : கம்பு, சோளம் முதலியவற்றின் அடி*
*கழி : கரும்பின் அடி*
*கழை : மூங்கிலின் அடி*
அடி : புளி, வேம்பு முதலியவற்றின் அடி.

## கிளைப்பிரிவுகள்

*தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்கள்.*

கவை: அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை; கொம்பு அல்லது கொப்பு: கவையின் பிரிவு; கிளை: கொம்பின் பிரிவு; சினை: கிளையின் பிரிவு; போத்து: சினையின் பிரிவு; குச்சு: போத்தின் பிரிவு; இணுக்கு: குச்சியின் பிரிவு.

## காய்ந்த அடியும் கிளையும் பெயர்பெறுதல்

*காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள்.*

சுள்ளி: காய்ந்த குச்சு (குச்சி); விறகு: காய்ந்த சிறுகிளை; வெங்கழி: காய்ந்த கழி; கட்டை: காய்ந்த கொம்பும் கவையும் அடியும்.

## இலை வகை

*தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள்.*

இலை: புளி, வேம்பு முதலியவற்றின் இலை; தாள்: நெல்,புல் முதலியவற்றின் இலை; தோகை: சோளம், கரும்பு முதலியவற்றின் இலை; ஓலை: தென்னை, பனை முதலியவற்றின் இலை; சண்டு: காய்ந்த தாளும் தோகையும்; சருகு: காய்ந்த இலை.

## கொழுந்து வகை.

*தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள்.*

துளிர் அல்லது தளிர்: நெல், புல் முதலியவற்றின் கொழுந்து; முறி அல்லது கொழுந்து: புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து; குருத்து: சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து; கொழுந்தாடை: கரும்பின் நுனிப்பகுதி.

## பூவின் நிலைகள்

*பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள்.*

அரும்பு: பூவின் தோற்றநிலை; போது: பூ விரியத் தொடங்கும் நிலை; மலர்(அலர்): பூவின் மலர்ந்த நிலை; வீ: மரஞ்செடியினின்று பூ கீழேவிழுந்த நிலை; செம்மல்: பூ வாடின நிலை.

### யார் இவர்?



தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்; சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அமைந்துள்ள அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" ஒன்றை அமைத்திருப்பவர்; பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்; தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கி வருபவர்; தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர்.

விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர்; அதற்காக, தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்; இன்றளவும் இவ்வாறே எழுதித் தமிழுக்குத் தனிப்பெரும் புகழை நல்கி வருபவர்.

பற்பல நூல்களை எழுதியிருப்பினும் இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலியன இவர்தம் தமிழ்ப் பணியைத் தரமுயர்த்திய நல்முத்துகள். அவர்தான் உலகப் பெருந்தமிழர் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்.

### பிஞ்சு வகை

*தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள்.*

பூம்பிஞ்சு: பூவோடு கூடிய இளம்பிஞ்சு; பிஞ்சு: இளம் காய்; வடு: மாம்பிஞ்சு; மூசு: பலாப்பிஞ்சு; கவ்வை: எள்பிஞ்சு; குரும்பை: தென்னை, பனை முதலியவற்றின் இளம் பிஞ்சு; முட்டுக் குரும்பை: சிறு குரும்பை; இளநீர்: முற்றாத தேங்காய்; நுழாய்: இளம்பாக்கு; கருக்கல்: இளநெல்; கச்சல்: வாழைப்பிஞ்சு.

### குலை வகை

*தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான (காய்களையோ கனிகளையோ) சொற்கள்:*

கொத்து: அவரை, துவரை முதலியவற்றின் குலை; குலை: கொடி முந்திரி போன்றவற்றின் குலை; தாறு: வாழைக் குலை; கதிர்: கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்; அலகு அல்லது குரல்: நெல், தினை முதலியவற்றின் கதிர்; சீப்பு: வாழைத்தாற்றின் பகுதி.

### கெட்டுப்போன காய்கனி வகை

*கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்கள்:*

சூம்பல்: நுனியில் சுருங்கிய காய்; சிவியல்: சுருங்கிய பழம்; சொத்தை: புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி; வெம்பல்: சூட்டினால் பழுத்த பிஞ்சு; அளியல்: குளுகுளுத்த பழம்; அழுகல்: குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்; சொண்டு: பதராய்ப் போன மிளகாய்.

கோட்டான் காய் அல்லது கூகைக்காய்: கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்; தேரைக்காய்: தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்; அல்லிக்காய்: தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்; ஒல்லிக்காய்: தென்னையில் கெட்ட காய்.

### பழத்தோல் வகை

*பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்கள்:*

தொலி: மிக மெல்லியது; தோல்: திண்ணமானது; தோடு: வன்மையானது; ஓடு: மிக வன்மையானது; குடுக்கை: சுரையின் ஓடு; மட்டை: தேங்காய் நெற்றின் மேற்பகுதி; உமி: நெல்,கம்பு முதலியவற்றின் மூடி; கொம்மை: வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி.

### மணிவகை

*தானியங்களுக்கு வழங்கும் சொற்கள்:*

கூலம்: நெல்,புல் (கம்பு) முதலிய தானியங்கள் ; பயறு: அவரை, உளுந்து முதலியவை; கடலை: வேர்க்கடலை, கொண்டைக்கடலை முதலியவை; விதை: கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து; காழ்: புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலியவற்றின் வித்து; முத்து: வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் வித்து; கொட்டை: மா, பனை முதலியவற்றின் வித்து; தேங்காய்: தென்னையின் வித்து; முதிரை: அவரை, துவரை முதலிய பயறுகள்.

### இளம் பயிர் வகை

*தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்கள்:*

நாற்று: நெல், கத்தரி முதலியவற்றின் இளநிலை; கன்று: மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை; குருத்து: வாழையின் இளநிலை; பிள்ளை: தென்னையின் இளநிலை;



குட்டி: விளாவின் இளநிலை; மடலி அல்லது வடலி: பனையின் இளநிலை; பைங்கூழ்: நெல், சோளம் முதலியவற்றின் பசும் பயிர்.

இதுகாறுங் கூறியவற்றால் தமிழ், சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெள்ளிதின் விளங்கும்.

ஒரு மொழி, பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf என ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மைபற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது முன்னர்க் காட்டப்பெற்றது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிறநாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, கோதுமையை எடுத்துக்கொள்ளின் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை முதலிய சிலவகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா,மட்டை,கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச்சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. இவற்றோடு வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டிலன்றி வேறெங்கும் விளைவதில்லை. தமிழ்நாட்டுள்ளும் தென்னாட்டிலேயே அவை விளைகின்றன. பழங்காலத்தில் விளைந்த அளவு பொன்னும் மணியும் முத்தும் பவளமும் இன்று விளையாவிடினும் அருமையான கூலங்களும் சிறு கூலங்களும் இன்றும் தென்றமிழ் நாட்டில் விளைந்து வருவது கண்கூடு.

**தெரியுமா?**



உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே. மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே.

*பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார்*

ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ்மக்கள் தனிப்பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர் என அறிக.

திருந்திய மக்களை மற்ற உயிரினின்றும் பிரித்துக் காட்டுவது மொழியாதலின், அதுவே ஒரு நாட்டாரின் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்கும் சிறந்த வழியாகும். பொருளைக் கூர்ந்து நோக்கி நுண்பாகுபாடு செய்து அவற்றிற்கேற்பப் பருப்பொருட் சொற்களும் நுண்பொருட் சொற்களும் அமைத்துக்கொள்வது, சிறந்த மதிநுட்பமும் பண்பாடும் உடைய மக்கட்கே இயலும்.

பாவாணர், *தமிழ்ச்சொல்வளம்* கட்டுரையில் வித்துவகை, வேர்வகை, அரிதாள் வகை, காய்ந்த இலைவகை, இலைக்காம்பு வகை, பூமடல் வகை, அரும்பு வகை, பூக்காம்பு வகை, இதழ்வகை, காய்வகை, கனி வகை, உள்ளீட்டு வகை, தாவரக் கழிவு வகை, விதைத்தோல் வகை, பதர் வகை, பயிர் வகை, கொடி வகை, மர வகை, கரும்பு வகை, காய்ந்த பயிர் வகை, வெட்டிய விறகுத்துண்டு வகை, மரப்பட்டை வகை, பயிர்ச்செறிவு வகை, நிலத்தின் தொகுப்பு வகை, செய் வகை, நில வகை, நன்செய் வகை, வேலி வகை, காட்டு வகை ஆகியவற்றின் சொல்வளங்களையும் விளக்கியுள்ளார்.

### நூல் வெளி

மொழிஞாயிறு என்றழைக்கப்படும் தேவநேயப் பாவாணரின் "சொல்லாய்வுக் கட்டுரைகள்" நூலில் உள்ள தமிழ்ச்சொல் வளம் என்னும் கட்டுரையின் சுருக்கம் பாடமாக இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரையில் சில விளக்கக் குறிப்புகள் மாணவர்களின் புரிதலுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளன.



பல்வேறு இலக்கணக் கட்டுரைகளையும் மொழியாராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதிய பாவாணர், தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர். செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டஇயக்குநராகப் பணியாற்றியவர்; உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.

**அலைகடல் தாண்டி, மலை பல கடந்து, எத்திசையிலும் பரவிய தமிழினத்தின்,**
**தமிழின் புகழ்மணப் பதிவுகளை நுகர்வோமா!...**

### எத்திசையும் புகழ் மணக்க...

**கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ்**

போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554இல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூல் ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது. ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் Carthila de lingoa Tamul e Portugues. இது அன்றைய காலத்திலேயே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.

*செய்தி– ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர்*

## கற்பவை கற்றபின்...

1. *பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.*

   *தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்.*

2. *ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.*

   **எ.கா.** *சொல்லுதல் – பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்....*

*அ.* ..............................................................................................................................



10th_Tamil_Unit 1.indd 8 12/08/2021 7:33:46 PM

மொழி

க

கவிதைப் பேழை

# இரட்டுற மொழிதல்

*– சந்தக்கவிமணி தமிழழகனார்*

நுழையும்முன்

விண்ணோடும் முகிலோடும் உடுக்களோடும் கதிரவனோடும் கடலோடும் தமிழ் இணைத்துப் பேசப்படுகிறது. இவற்றுக்குள்ள ஆற்றலும் விரிவும் ஆழமும் பயனும் தமிழுக்கும் உண்டு எனப் போற்றப்படுகிறது. தமிழ் கடலோடு ஒத்திருத்தலை இரட்டுற மொழிவதன் மூலம் அறிகையில் அதன் பெருமை ஆழப்படுகிறது; விரிவுபடுகிறது.




### ஆழிக்கு இணை

*முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்*
*மெத்த வணிகலமும் மேவலால் –நித்தம்*
*அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு*
*இணைகிடந்த தேதமிழ் ஈண்டு*

*– தனிப்பாடல் திரட்டு*

### சொல்லும் பொருளும்

துய்ப்பது – கற்பது, தருதல்

மேவலால் – பொருந்துதலால், பெறுதலால்

### பாடலின் பொருள்

*தமிழ்:* தமிழ், இயல் இசை நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; முதல் இடை கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது; ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது; சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

*கடல்:* கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது; வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது; மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது; தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.

| பாடல் | தமிழுக்கு | கடலுக்கு |
|---|---|---|
| முத்தமிழ் | இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் | முத்தினைஅமிழ்ந்து எடுத்தல் |
| முச்சங்கம் | முதல், இடை,கடை ஆகிய முச்சங்கம் | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| மெத்த வணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும் காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தமை | நீரலையைத் தடுத்து நிறுத்தி, சங்கினைக் காத்தல் |

## தெரிந்து தெளிவோம்

### இரட்டுற மொழிதல்

ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனைச் சிலேடை அணி என்றும் அழைப்பர். செய்யுளிலும் உரைநடையிலும் மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

### நூல் வெளி



புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பான தனிப்பாடல் திரட்டு (ஐந்தாம் பகுதி – கழகப் பதிப்பு) என்னும் நூலிலிருந்து இந்தப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது. இப்பாடலைப் படைத்தவர் தமிழழகனார்.

சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படும் தமிழழகனாரின் இயற்பெயர் சண்முகசுந்தரம். இலக்கணப் புலமையும் இளம்வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்ற இவர் பன்னிரண்டு சிற்றிலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

## கற்பவை கற்றபின்...

1. அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., "அடடே! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!" என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.

   ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமரிசனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒரு முறை ஒரு பெரிய வித்துவானுடைய இசைநிகழ்ச்சியை விமரிசனம் செய்யும் போது அவர் குறிப்பிட்டது: "அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்."

   இ) தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டார்!

   இவைபோன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல்நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.

2. மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக .

www.tntextbooks.in

விரிவானம்

மொழி

க

# உரைநடையின் அணிநலன்கள்

– *எழில்முதல்வன்*

**நுழையும்முன்**

சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பு; இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டம்; இக்கால இலக்கியம் நம் பூங்கா. தோப்பு ஈந்த பயன்களையும் தோட்டம் தந்த நயங்களையும் பூங்காவின் அழகினையும் ஒன்று சேர்த்து உரைநடையின் அணிநலன்களாகக் காண்போமா?...

**கற்பனை உரையாடல்**

**பங்கு பெறுவோர் – இணையத் தமிழன், சங்கப் புலவர்**

*சங்கப் புலவர் ஒருவர் இயற்கைசூழ் இடமொன்றில் எழுத்தாணி கொண்டு ஓலைச் சுவடியில் எழுதிக்கொண்டிருக்கிறார். அப்போது அவர்முன் சிறிய காலஇயந்திரம் ஒன்று தோன்றுகிறது.*




*அதிலிருந்து இன்றைய மனிதர் ஒருவர் இறங்கி, புலவரை நோக்கி நடந்து வருகிறார். அச்சமும் அதைவிட வியப்பும் மேலோங்கப் பார்த்துக்கொண்டிருந்த புலவரின் கையைப் பற்றிக் குலுக்குகிறார்.*

*இணையத் தமிழன்:* வணக்கம், ஐயா! நான் இணையத்தமிழன் வந்திருக்கிறேன்.

*சங்கப் புலவர்:* இணையத்தமிழனா?! வியப்பு! உங்கள் வருகையை என் தோழர் குன்றூர்க் கிழாரிடம் கூறவேண்டும்! அவர் உங்களையும் உங்கள் ஊர்தியையும் குறித்து ஓர் ஆசிரியப்பா இயற்றிவிடுவார்.

*இணையத் தமிழன்:* இருக்கட்டும் ஐயா! அவரை இன்னொரு வாய்ப்பில் பார்த்துக்கொள்ளலாம். என்னால் உங்களுடன் இங்கு ஒரு மணிநேரம் மட்டுமே இருக்க முடியும். அதற்குள் உங்களோடு இலக்கியம் பற்றிச் சிறிதுநேரம் பேச விரும்புகிறேன்.

*சங்கப் புலவர்:* கபிலரின் குறிஞ்சிப் பாட்டுப் பற்றியா? எம் போன்ற புலவரின் தனிச் செய்யுள்கள் பற்றியா? யாது குறித்து?

*இணையத் தமிழன்:* புலவரே! உங்கள் காலத்துப் பாடல்களையெல்லாம் பிற்காலத்தில் சங்கப் பாடல்கள் என்று தொகுத்து



10th_Tamil_Unit 1.indd 11 12/08/2021 7:33:47 PM

வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் பாட்டும் தொகையுமாக நூல் விற்பனை நிலையங்களிலும் இணையத்திலும் கிடைக்கின்றன.

சங்கப் புலவர்: இணையமா?

இணையத் தமிழன்: புலவரே! எங்கள் காலத்து அறிவியல் கண்டுபிடிப்புகளைக்காண உங்களை என்னுடன் பின்னர் ஒருமுறை அழைத்துப் போகிறேன். இப்போது இலக்கியம் குறித்துப் பேசலாம்.

சங்கப் புலவர்: நீரும் பாக்கள் இயற்றுவீரோ? அகமா? புறமா? அகத்துள் உவமை, மெய்ப்பாடு ஆகியன வைத்திருக்கிறீரா? நும் பாக்கள் ஆசிரியமா?

இணையத் தமிழன்: ஆசிரியப்பாவா!... அதையும் எழுத எங்களில் கொஞ்சம் பேர் இருக்கிறார்கள். எங்கள் காலத்தில் புதுப்புது இலக்கிய வடிவங்கள் தோன்றியிருக்கின்றன. சங்கப் பாடல்களுக்குப் பின், தமிழ் இலக்கியம் அறஇலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகளாகி... இப்போது நவீன கவிதைகளில் வந்து நிற்கிறது. உரைநடையின் வளர்ச்சியோ அளவற்றது! சிறுகதை, கட்டுரை, புதினம்... இவையெல்லாம் எங்கள்கால இலக்கிய வடிவங்கள்!

சங்கப் புலவர்: உரைநடையா! தொல்காப்பியர் கூறுகிறாரே!.....

இணையத் தமிழன்: அதேதான்! நீங்களும் நானும் பேசுகிறோமே! அதுதான் உரைநடை! பேசினால் உரையாடல்; எழுதினால் உரைநடை. பெரும்பாலும் உரைநடை வடிவில்தான் நாங்கள் இலக்கியம் படைக்கிறோம்.

சங்கப் புலவர்: எம்முடைய பாக்களின் உத்திகளை நீவிர் பயன்படுத்துவீரோ?

இணையத் தமிழன்: என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள்! நீங்கள் தந்த உத்திகளில் சிலவற்றை நீங்கள் தந்த பெயரிலும் சிலவற்றை நாங்கள் வைத்த பெயரிலும் பயன்படுத்துகிறோம்.

சங்கப் புலவர்: மகிழ்ச்சி! உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்ற கருவி. இவற்றை நீவிர் எப்படிப் பயன்படுத்துவீர்?

இணையத் தமிழன்: "திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப்போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்று குறிஞ்சிமலர் என்னும் நூலில் நா.பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

சங்கப் புலவர்: அருமையான உவமையைக் கூறினீர்! அடுத்து...

இணையத் தமிழன்: இன்னும் உண்டே! உங்களுக்கு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு வந்த 'தண்டி' என்பவர், உருவகத்தைப் பற்றி 'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்' என்று எழுதியிருக்கிறார். எங்கள் இலக்கியங்களில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி எழுப்புவதில் வெற்றிபெறுகின்றது.



## தெரியுமா?

### முதல் தமிழ்க் கணினி

தமிழ் மறையான திருக்குறளைத் தந்த "திருவள்ளுவர்" பெயரில் முதல் தமிழ்க் கணினி 1983 செப்டம்பரில் டி.சி.எம். டேட்டா புரொடக்ட்ஸ் என்னும் தனியார் நிறுவனம் உருவாக்கி விற்பனைக்குக் கொண்டுவந்தது. இக்கணினியில் முதல் முறையாகத் தமிழ் மொழியிலேயே விவரங்களை (Data) உள்ளீடாகச் செலுத்தி நமக்குத் தேவையான தகவல்களை வெளியீடாகக் கணினியிலிருந்து பெறமுடிந்தது. இந்தக் கணினி தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளையும் கையாளக்கூடியதாக அமைந்தது. சென்னை தேனாம்பேட்டையில் இருந்த புள்ளிவிவரத் துறை அலுவலகத்திற்கும் தலைமைச் செயலகத்துக்கும் கோப்புகளையும் செய்திகளையும் பறிமாறிக்கொண்ட முதல் நேர்வழிக் கணினியும் "திருவள்ளுவரே"!

'முகநிலவில் வியர்வைமுத்துகள் துளிர்த்தன' என்று உருவகமாக எழுதுகிறார்கள்.

"களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" – இது எங்கள் காலத்தில் வாழ்ந்த அறிஞர் அண்ணா அவர்களின் உரைநடை!

சங்கப் புலவர்: அட! என்னே அவரது கற்பனை! மேலும் கேட்கப் பெருவிழைவு கொள்கிறேன்...

இணையத் தமிழன்: விதவிதமான உவமைகளை நீங்கள் பயன்படுத்தியிருக்கிறீர்கள். அவற்றுக்கெல்லாம் பிற்காலத்தில் தோன்றிய இலக்கண நூல்களில் பெயர் வைத்திருக்கிறார்கள். உவம உருபு மறைந்து வந்தால், அதற்கு எடுத்துக்காட்டு உவமை அணி என்று பெயர்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்"

இந்தத் திருக்குறளில் உவம உருபு இல்லை. இதை நாங்கள் உரைநடையிலும் பயன்படுத்துகிறோம். எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் 'இணை ஒப்பு' (analogy) என்கிறோம்.

"ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள், ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது, புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என்று எழுத்தாளர் வ.ராமசாமி 'மழையும் புயலும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்கப் புலவர்: என்னே செறிவு!

இணையத் தமிழன்: அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து எழுதுவோம்.

சங்கப் புலவர்: இலக்கணத்தில் இது உண்டே! தொல்காப்பியர், "ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" (செய்யுளியல், 192) என்று எழுதும் திறத்தைக் குறிப்பிட்டிருக்கின்றார். உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதுண்டு என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

இணையத் தமிழன்: நீங்கள் குறிப்பிட்ட இரண்டையும் நாங்கள் 'இலக்கணை' என்கிறோம்.

"சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்; ஆல்,'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா?' என்னும். அரசு கண்ணிற்படும். 'யான் விழுதின்றி வானுற ஓங்கிநிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள், காண்' என்னும். 'வேம்பு, என்நிழல் நலஞ்செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா' என்னும். அத்தி, நாகை, விளா, மா, வில்வம் முதலிய மரங்கள் விளியாமலிருக்குமோ? சிந்தனையில் அவைகளின் நுட்பங்கள் விளங்கும். மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர்வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்"

எங்கள் காலத் தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் இப்படி எழுதியிருக்கிறார்.

சங்கப் புலவர்: மோனையும் எதுகையும் செய்யுளில் வருமாயின் இனிய ஓசையின்பம் விளையும். இவற்றினை நீவிர் உரைநடையில் பயன்படுத்துவீரோ?

இணையத் தமிழன்: ஆம். இதோ!

"தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில் அமைந்த திருக்குற்றாலம், மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே, கோங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்; குரவமும் முல்லையும்

*நறுமணங் கமழும்! கோலமாமயில் தோகை விரித்தாடும்; தேனுண்ட வண்டுகள் தமிழ்ப் பாட்டிசைக்கும்; இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்திறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும்பொழுது சிதறும் நீர்த் திவலைகள் பாலாவிபோற் பரந்தெழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும்"*

என்று சொல்லின் செல்வர் இரா.பி.சே., தமிழின்பம் என்னும் நூலில் எழுதியுள்ளார்.

*சங்கப் புலவர்:* அருமை! உணர்வு வெளிப்பாட்டிற்கும் சொல்லப்படும் கருத்திற்கு அழுத்தம் தரவும் நீவிர் உரைநடையில் வேறு என்ன உத்திகளைப் பயன்படுத்துவீர்?

*இணையத் தமிழன்:* இதற்காகச் *சொல்லையோ கருத்தையோ திரும்பத் திரும்பச் சொல்வதுண்டு!* சொற்களை அளவாகப் பயன்படுத்தி உரைநடையை அழகு செய்ய மு.வரதராசனார், தம் நாட்டுப்பற்று என்னும் கட்டுரைத் தொகுப்பில்,

*"வாழ்க்கை நடத்துவதற்குப் பொருள்கள்பல வேண்டும். அரிசி, காய், கனி முதலியவை வேண்டும். உடை, வீடு முதலியவை வேண்டும். காசும் காகித நோட்டும் வேண்டும், இன்னும் பல வேண்டும். இவற்றை ஆளும் அறிவும் வேண்டும்"* என்று எழுதியிருக்கிறார்.

*சங்கப் புலவர்:* மிகச் சுவையாக உள்ளது! இன்னும் வேறென்ன உத்திகள்?

*இணையத் தமிழன்:* இருக்கின்றனவே! படிப்பவருக்கு முரண்படுவதுபோல இருக்கும்; உண்மையில் முரண்படாத – மெய்ம்மையைச் சொல்லுவது 'முரண்படு மெய்ம்மை' (paradox).

இதோ! அதற்கும் ஓர் எடுத்துக்காட்டு

*'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?'*

*சங்கப் புலவர்:* மேலும்…

*இணையத் தமிழன்:* முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுவார்கள்… *'கலப்பில்லாத பொய்'*… இதைச் சொல்முரண் (Oxymoron) என்கிறோம். சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவோம்… இதனை எதிரிணை இசைவு (Antithesis) என்கிறோம்.

*"குடிசைகள் ஒரு பக்கம்; கோபுரங்கள் மறுபக்கம்; பசித்த வயிறுகள் ஒருபக்கம்; புளிச்சேப்பக்காரர்கள் மறுபக்கம்: மெலிந்த எலும்புக்கூடுகள் ஒருபக்கம்; பருத்த தொந்திகள் மறுபக்கம்; கேடுகெட்ட இந்தச் சமுதாயத்திற்கு என்றைக்கு விமோசனம்? தோழர்களே, சிந்தியுங்கள்!"* என்று தோழர் ப.ஜீவானந்தம் எழுதியிருப்பது இதற்கு நல்ல எடுத்துக்காட்டு!

*சங்கப் புலவர்:* கேட்கும்போதிலே சிலிர்ப்பு உண்டாகிறதே!

*இணையத் தமிழன்:* புலவரே! இதையும் கேளுங்கள்! விடைதரவேண்டிய தேவை இல்லாமல் கேள்வியிலேயே பதில் இருப்பதைப் போலவும் எழுதுவோம்! அது உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு உதவக்கூடியது!

*"அவர் (பெரியார் ஈ.வெ.ரா) பேசாத நாள் உண்டா? குரல் கேட்காத ஊர் உண்டா? அவரிடம் சிக்கித் திணறாத பழமை உண்டா? எதைக் கண்டு அவர் திகைத்தார்? எந்தப் புராணம் அவரிடம் தாக்குதலைப் பெறாதது?… எனவேதான், பெரியாருடைய பெரும் பணியை நான் ஒரு தனிமனிதனின் வரலாறு என்றல்ல ஒரு சகாப்தம் – ஒரு கால கட்டம் – ஒரு திருப்பம் – என்று கூறுகிறேன்."*

இது பெரியாரைப் பற்றி அறிஞர் அண்ணா பேசியது.

எப்படி இருக்கிறது ஐயா?

*சங்கப் புலவர்:* உணர்ச்சிப் பெருவெள்ளம்! இதன் உச்சநிலை (climax) என்ன?

*இணையத் தமிழன்:* உச்சநிலைதானே? இருக்கிறதே! சொல்லையோ கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறையிலே உள்ள சிறப்புதான் அது.



10th_Tamil_Unit 1.indd 14 12/08/2021 7:33:47 PM

"இந்தியாதான் என்னுடைய மோட்சம்; இந்தியாவின் நன்மைதான் என் நன்மை. இந்தியாதான் என் இளமையின் மெத்தை; என் யௌவனத்தின் நந்தவனம்; என் கிழக்காலத்தின் காசி" என்று பாரதி என்னும் தமிழ்க்கவிஞர் நம் நாட்டை உயர்த்திக் கூறுகிறார்.

சங்கப் புலவர்: மிக்க மகிழ்ச்சி! நீர் தமிழ் உரைநடைச் செழுமை பற்றிக் கூறக் கூற மேலும் அவற்றைப் படித்து இன்புற அவாவுறுகிறேன்!

இணையத் தமிழன்: அதற்கென்ன புலவரே! அடுத்த முறை வரும்போது என்னுடைய மடிக்கணினியில் சேமித்து வைத்துள்ள பல்வேறு இலக்கியங்களை உங்களுக்குத் தருகிறேன்! பயன்படுத்திக்கொள்ளுங்கள்! நேரமாகிவிட்டது. போய்வருகிறேன் புலவரே!

சங்கப் புலவர்: போய் வாரும்!... மடிக்கணினி என்று ஏதோ கூறினார்! அப்படியென்றால் என்னவென்று கேட்பதற்குள் பறந்துவிட்டாரே!

### நூல்வெளி

எழில்முதல்வன் எழுதிய 'புதிய உரைநடை' என்னும் நூலிலுள்ள உரைநடையின் அணிநலன்கள் என்னும் கட்டுரையின் சுருக்கம், இங்கு உரையாடல் வடிவமாக மாற்றித் தரப்பட்டுள்ளது.

மா.இராமலிங்கம் (எ) எழில்முதல்வன் மாநிலக் கல்லூரியில் பயின்று அங்கேயே பேராசிரியர் பணியைத் தொடர்ந்தவர். குடந்தை அரசு ஆடவர் கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிசெய்தவர். மரபுக் கவிதை, புதுக்கவிதை படைப்பதிலும் வல்லவர். இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் முதலிய நூல்களை இயற்றிய பெருமைக்குரியவர். 'புதிய உரைநடை' என்னும் நூலுக்காக சாகித்திய அகாதெமி விருதுபெற்றவர்.

தொன்று தொட்டு இன்றுவரை நின்று நிலவும் ஊர்கள்,
தொன்மைத் தமிழ் நாகரிகத்தின் வேர்கள்! இலக்கியத்தின் சீர்களில்...

**முன்தோன்றிய மூத்தகுடி**



*"வாழையும் கமுகும் தாழ்குலைத் தெங்கும்*
*மாவும் பலாவும் சூழ்அடுத்து ஓங்கிய*
*தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்"*

*சிலப்பதிகாரம், காடுகாண் காதை: 53–55*

திண்டுக்கல் மாவட்டத்தின் சிறுமலை

## கற்பவை கற்றபின்...

1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம்பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.

| இலக்கியத் தொடர் | இடம்பெற்றுள்ள நயம் |
|---|---|
| உள்ளங்கை நெல்லிக்கனி போல | உவமை |
| | |

2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.

தலைப்பு – நேரம்      தவிர்க்க வேண்டிய சொல் – கடிகாரம்

குறிப்பு – ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது.
இது போன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப் பழகுக.

கற்கண்டு

மொழி
க

# எழுத்து, சொல்

1Q2FY

மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம். மொழியின் சிறப்புகளை அறியவும் இலக்கணம் துணை செய்யும்.

## எழுத்து

### சார்பெழுத்து

உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் சார்பெழுத்துகள் ஆகும். அவற்றுள் உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகிய இரண்டு அளபெடைகள் குறித்து இங்குக் காண்போம்.

அளபெடுத்தல் – நீண்டு ஒலித்தல்.

பேச்சு வழக்கில் சொற்களை நீட்டி ஒலித்துப் பேசுவோம். அவ்வாறு பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடுத்தல் பயன்படுகிறது.

**எ. கா.** அம்மாஅ, தம்பீஇ

### 1. உயிரளபெடை

செய்யுளில் மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்போது அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது **உயிரளபெடை** எனப்படும்.

உயிரளபெடை மூன்று வகைப்படும்.

#### அ) செய்யுளிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்போம். இதனை **இசைநிறை அளபெடை** என்றும் கூறுவர்.

ஓஒதல் வேண்டும் – மொழி முதல்
உறாஅர்க் குறுநோய் – மொழியிடை
நல்ல படாஅ பறை – மொழியிறுதி

#### ஆ) இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது **இன்னிசை அளபெடை** ஆகும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

#### இ) சொல்லிசை அளபெடை

செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது **சொல்லிசை அளபெடை** ஆகும்.

உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

நசை – விருப்பம்; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை எச்சமாக மாறியது.

### 2. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும், ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது **ஒற்றளபெடை** ஆகும்.

எங்ங் கிறைவன்

எஃஃ கிலங்கிய கையராய் இன்னுயிர்

## சொல்

'பூ மலர்ந்தது.'

'மாடு புல் தின்றது.'

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அது,

அ) இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிக்கும்.

ஆ) மூவகை இடங்களிலும் வரும்.

இ) உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வரும்.

ஈ) வெளிப்படையாகவும் குறிப்பாகவும் விளங்கும்.

### மூவகை மொழி

தனி மொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழி மூன்று வகையாக அமையும்.

> ஒருமொழி ஒருபொரு ளனவாம் தொடர்மொழி
> பலபொரு ளனபொது இருமையும் ஏற்பன.
> (நன்னூல் – 260)

### தனிமொழி

ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது **தனிமொழி** எனப்படும்.

*எ. கா.* கண், படி – பகாப்பதம்
கண்ணன், படித்தான் – பகுபதம்

### தொடர்மொழி

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது **தொடர்மொழி** ஆகும்.

*எ. கா.* கண்ணன் வந்தான்.
மலர் வீட்டுக்குச் சென்றாள்.

### பொதுமொழி

ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது **பொதுமொழி** எனப்படும்.

*எ. கா.*

எட்டு – எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.

வேங்கை – வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.

இவையே எள் + து எனவும் வேம் + கை எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும். இவை இருபொருள்களுக்கும் பொதுவாய் அமைவதால் பொது மொழியாகவும் இருக்கிறது.

### தொழிற்பெயர்

ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

*எ. கா.* ஈதல், நடத்தல்

### விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்

வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் **விகுதி பெற்ற தொழிற்பெயர்** ஆகும்.

| வினையடி | விகுதி | தொழிற்பெயர் |
|---|---|---|
| நட | தல் | நடத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

**ஒரே வினையடி பல விகுதிகளையும் ஏற்கும்.**

*எ. கா.* நட என்பது வினையடி
நடை, நடத்தல்

### எதிர்மறைத் தொழிற்பெயர்

எதிர்மறைப் பொருளில் வருவது **எதிர்மறைத் தொழிற்பெயர்** ஆகும்.

*எ. கா.* நடவாமை, கொல்லாமை



10th_Tamil_Unit 1.indd 17 12/08/2021 7:33:49 PM

### முதனிலைத் தொழிற்பெயர்

விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயராகும்.

**எ. கா.** தட்டு, உரை, அடி

இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

### முதனிலை திரிந்த தொழிற்பெயர்

விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆகும்.

**எ. கா.** பேறு

| தொழிற்பெயர் | முதனிலை | முதனிலை திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|
| கெடுதல் | கெடு | கேடு |
| சுடுதல் | சுடு | சூடு |

### வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.

**எ. கா.** வந்தவர் அவர்தான்.
பொறுத்தார் பூமியாள்வார்.

### தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும் | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| காலம் காட்டாது | காலம் காட்டும் |
| படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது |
| **எ. கா.** பாடுதல், படித்தல் | **எ. கா.** பாடியவள், படித்தவர் |



## கற்பவை கற்றபின்...

1. தேன், நூல், பை, மலர், வா – இத் தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.
2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.
   காண், சிரி, படி, தடு
   **எ.கா.** காட்சி, காணுதல், காணல், காணாமை
3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.
   அண்ணன் : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி )
   தம்பி : _ _ _ _ _ (தனிமொழி)
   அண்ணன் : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ வாங்குகிறாய்? (தொடர்மொழி)
   தம்பி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ (தொடர்மொழி)
   அண்ணன் : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _(தனிமொழி)
   தம்பி : _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ (தொடர்மொழி)
   அண்ணன் :
   தம்பி :
4. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன் ; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.'
   இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.
5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் – இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

# திறன் அறிவோம்

**பலவுள் தெரிக.**

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது–

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. '<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது –

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் –

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா

இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –

அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய

இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல்; கேட்டவர்

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை –

அ) குலை வகை ஆ) மணி வகை

இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**குறுவினா**

1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

2. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

3. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

4. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.

5. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

## சிறுவினா

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'

இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது' இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும்.

இக்கூற்றில் வண்ண எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

4. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

## நெடுவினா

1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

2. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

3. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.
சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.



10th_Tamil_Unit 1.indd 20 12/08/2021 7:33:49 PM

## மொழியை ஆள்வோம்!

### படித்துச் சுவைக்க.

பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.

*"மரமது[1] மரத்தில்[2] ஏறி*
*மரமதைத்[3] தோளில் வைத்து*
*மரமது[4] மரத்தைக்[5] கண்டு*
*மரத்தி[6]னால் மரத்தைக்[7] குத்தி*
*மரமது[8] வழியே சென்று*
*வளமனைக் கேகும் போது*
*மரமது[9] கண்ட மாதர்*
*மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்"*



*தனிப்பாடல் திரட்டு – சுந்தரகவிராசர்*

| 1 | 2 | 3 | 4, 9 | 5, 7 | 6 | 8 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரசன் (அரசமரம்) | மா– குதிரை (மாமரம்) | வேல் (கருவேலம்) | அரசன் | புலி (வேங்கை) | வேல் | காட்டு வழி | ஆல் (ஆலமரம்) | அத்தி (அத்தி மரம்) ஆல் +அத்தி = ஆரத்தி |

### மொழிபெயர்ப்பு

1. *If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart –* **Nelson Mandela**
2. *Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going –* ***Rita Mae Brown***

### சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

*"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை*
*தேரும் சிலப்பதி காறமதை*
*ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்*
*ஓதி யுனர்ந்தின் புருவோமே"*

### கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.

(குவியல், குலை, மந்தை, கட்டு)

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | | புல் | |
| பழம் | | ஆடு | |



10th_Tamil_Unit 1.indd 21 12/08/2021 7:33:50 PM

**வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.
4. பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.

**எ.கா.** கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள்.

**தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

1. உலகில் வாழும் மக்களில் சிலர் கனியிருக்கக் காய் புசித்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி இன்னற்படுகின்றனர்.
2. வள்ளல் குமணன் வறுமையால் வாடிவந்த புலவனுக்குத் தனது தலையைக் கொடுத்து மங்காப் புகழ் பெற்றான்.
3. நளனும் அவனது துணைவியும் நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழைமுகில் கண்ட மஞ்ஞை போலக் களி கொண்டனர்.
4. சோலையிற் பூத்த மணமலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன.
5. பசுப்போல் சாந்தமும் புலிபோல் தீரமும் யானை போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

**கட்டுரை எழுதுக.**

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**நயம் பாராட்டுக.**

*தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே*
*தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே*
*ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே*
*உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே*
*வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே*
*மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே*
*தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே*
*தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே*

*கா.நமச்சிவாயர்*

## மொழியோடு விளையாடு

**சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**

தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ

*எ.கா.* பூமணி

**குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.**

குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்

*எ.கா.* குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா?


**எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.**

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | | |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | | |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | | |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | | |

**அகராதியில் காண்க.**

அடவி ,அவல், சுவல், செறு, பழனம், புறவு

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



---

---

---

---

---

## செயல் திட்டம்

நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைச் சொற்களுக்கான படத்தொகுப்பை உருவாக்குக.

## நிற்க அதற்குத் தக...

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| Vowel – உயிரெழுத்து | | Monolingual – ஒரு மொழி | |
| Consonant – மெய்யெழுத்து | | Conversation – உரையாடல் | |
| Homograph – ஒப்பெழுத்து | | Discussion – கலந்துரையாடல் | |


## அறிவை விரிவு செய்

நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் – முனைவர் சேதுமணி மணியன்

தவறின்றித் தமிழ் எழுதுவோம் – மா. நன்னன்

பச்சை நிழல் – உதயசங்கர்







## இணையத்தில் காண்க.

*http://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-58.htm*

*http://www.tamilvu.org/library/lA460/html/lA460ind.htm*

*https://www.vikatan.com/news/tamilnadu/115717-devaneya-pavanar-birth-anniversary.html*



10th_Tamil_Unit 1.indd 24 12/08/2021 7:33:50 PM